# செப்டம்பர் – 03 – திங்கள்

**புனித பெரிய கிரகோரி**

**எனக்கு அறிவு புகட்டுவோர் அனைவரினும் நான் விவேகமுள்ளனவாய் இருக்கின்றேன்: திபா. 119:99**

## முதல் வாசகம் : 1 கொரிந்தியர் 2 : 1 – 5

சகோதர சகோதரிகளே, கடவுளைப் பற்றிய மறைபொருளை அறிவிக்க நான் உங்களிடம் வந்தபோது மிகுந்த சொல்வன்மையுடனோ ஞானத்துடனோ வரவில்லை. நான் உங்களிடையே இருந்தபோது மெசியாவாகிய இயேசுவைத்தவிர, அதுவும் சிலுவையில் அறையப்பட்ட அவரைத்தவிர, வேறு எதையும் அறியவேண்டும் என்று நினைக்கவில்லை. நான் உங்கள் நடுவில், வலுவற்றவனாய், மிகுந்த அச்சத்தோடும் நடுக்கத்தோடும் இருந்தேன். நான் பறைசாற்றிய செய்தி ஞானத்தின் கவர்ச்சியான சொற்களில் அமையவில்லை. ஆனால் அது தூய ஆவியின் வல்லமையை எடுத்துக்காட்டுவதாக அமைந்தது. உங்கள் நம்பிக்கைக்கு அடிப்படை மனித ஞானம் அல்ல, கடவுளில் வல்லமையே.

**பதில்பாடல் :** ஆண்டவரே திருச்சட்டத்தின் மீது எத்துணைப் பற்றுக் கொண்டுளளேன்.

## நற்செய்தி : லூக்கா 4 : 16 - 30

அக்காலத்தில் இயேசு தாம் வளர்ந்த ஊராகிய நாசரேத்துக்கு வந்தார். தமது வழக்கத்தின்படி ஓய்வுநாளில் தொழுகைக் கூடத்திற்குச் சென்று வாசிக்க எழுந்தார். இறைவாக்கினர் எசாயாவின் சுருளேடு அவரிடம் கொடுக்கப்பட்டது. அவர் அதைப் பிரித்தபோது கண்டபகுதியில் இவ்வாறு எழுதியிருந்தது. ”ஆண்டவருடைய ஆவி என்மேல் உள்ளது. ஏனெனில், அவர் எனக்கு அருள்பொழிவு செய்துள்ளார். ஏழைகளுக்கு நற்செய்தியை அறிவிக்கவும் சிறைப்பட்டோர் விடுதலை அடைவர். பார்வையற்றோர் பார்வைபெறுவர் என முழக்கமிடவும் ஒடுக்கப்பட் டோரை விடுதலை செய்து அனுப்பவும் ஆண்டவர் அருள்தரும் ஆண்டினை முழக்கமிட்டு அறிவிக்கவும் அவர் என்னை அனுப்பியுள்ளார்.” பின்னர் அந்த ஏட்டைச்சுருட்டி ஏவலரிடம் கொடுத்துவிட்டு அமர்ந்தார். தொழுகைக்கூடத்தில் இருந்தவர்களின் கண்கள் அனைத்தும் அவரையே உற்றுநோக்கியிருந்தன. அப்பொழுது அவர் அவர்களை நோக்கி, ”நீங்கள் கேட்ட இந்த மறைநூல் வாக்கு இன்று நிறைவேறிற்று” என்றார். அவர் வாயிலிருந்து வந்த அருள்மொழிகளைக் கேட்டு வியப்புற்று, ”இவர் யோசேப்பின் மகன் அல்லவா? ”எனக்கூறி எல்லாரும் அவரைப் பாராட்டினர். அவர் அவர்களிடம், ”நீங்கள் என்னிடம், ”மருத்துவரே உம்மையே நீர் குணமாக்கிக்கொள்ளும்” என்னும் பழமொழியைச் சொல்லி, ”கப்பர்நாகுமில் நீர் செய்ததாக நாங்கள் கேள்விப்பட் டவற்றை எல்லாம் உம் சொந்த ஊராகிய இவ்விடத்திலும் செய்யும்” எனக் கண்டிப்பாய்க் கூறுவீர்கள். ஆனால் நான் உறுதியாக உங்களுக்குச் சொல்கிறேன். இறைவாக்கினர் எவரும் தம் சொந்த ஊரில் ஏற்றுக் கொள்ளப்படுவதில்லை. உண்மையாக நான் உங்களுக்குச் சொல்கிறேன் எலியாவின் காலத்தில் மூன்றரை ஆண்டுகளாக வானம் பொய்த்தது. நாடெங்கும் பெரும் பஞ்சம் உண்டானது. அக்காலத்தில் இஸ்ரயேலரிடையே கைம்பெண்கள் பலர் இருந்தனர். ஆயினும் அவர்களுள் எவரிடமும் எலியா அனுப்பப்படவில்லை. சீதோனைச் சேர்ந்த சாரிபாத்தில் வாழ்ந்த ஒரு கைம்பெண்ணிடமே அனுப்பப்பட்டார். மேலும், இறைவாக்கினர் எலிசாவின் காலத்தில் இஸ்ரயேலரிடையே தொழுநோயாளர்கள் பலர் இருந்தனர் ஆயினும் அவர்களுள் எவருக்கும் நோய் நீங்கவில்லை. சிரியாவைச் சார்ந்த நாமானுக்கே நோய் நீங்கியது” என்றார். தொழுகைக்கூடத்தில் இருந்த யாவரும் இவற்றைக் கேட்டபோது, சீற்றங்கொண்டனர் அவர்கள் எழுந்து, அவரை ஊருக்கு வெளியே துரத்தி, அவ்வூரில் அமைந்திருந்த மலை உச்சியிலிருந்து கீழே தள்ளிவிட இழுத்துச் சென்றனர். அவர் அவர்கள் நடுவே நடந்து சென்று அங்கிருந்து போய்விட்டார்.

**தியானம்:** இன்றைய நற்செய்தி வாசகத்தில் வரும் நிகழ்வு இயேசுவின் ஒட்டு மொத்த பணியின் அடையாளமாக வருகிறது இதை மூன்று பாகங்களாகப் பிரிக்கலாம். 1)ஆவியினால் அருட்பொழிவு செய்யப்படல்: ”ஆண்டவரின் ஆவி என் மேலே ஏனெனில் அவர் என்னை அருட்பொழிவு செய்துள்ளார்” என்ற வார்த்தைகள் இயேசு தன ்வாழ்நாள் முழுவதும் தூய ஆவியால் இயக்கப்பட்டார் என்ற உண்மையை நமக்கு சுட்டிக்காட்டுகின்றன. நாள்தோறும் தன் தந்தையோடு உறவாடியதன் வழியாக அவர் பெற்றுக்கொண்டது இந்த ஆவியின் அருட்பொழிவையே. 2) செயல் வடிவம் பெறும் இறைவார்த்தை ஆவியானவரின் துணையோடு மறைநூலில்இயேசு தனக்குள் இருந்த இறைவனின் வார்த்தைகளுக்குச் செயல்வடிவம் கொடுத்தார். ”நீங்கள் கேட்ட இந்த மறை நூல் வாக்கு இன்று நிறைவேறிற்று. ”என்ற வார்த்தைகள் அதையே நமக்கு சுட்டிக்காட்டுகின்றன. தன் வாழ்நாள் முழுவதும் இறைவனின் வார்த்தைகளை இயேசு எடுத்துரைப்பது மட்டுமல்லாமல் அதற்கு செயல் வடிவம் கொடுத்தார் 3) எதிர்ப்பு இறைவனின் அளவற்ற அன்பையும் ஈடு இணையற்ற இரக்கத்தையும், வார்த்தையாக , செயலாக பறைசாற்றும்போது குறுகிய மனம் உள்ளவர்கள் அதை ஏற்றுக்கொள்வது கடினம் அது தான் இயேசுவுக்கு நிகழ்ந்தது. இயேசுவின் அன்பு இனத்தையும் மதத்தையும் தாண்டியது என்று உரைத்ததை யூதர்களால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை. அவரைக்கொல்லவும் துணிந்தனர். இயேசு இறுதியில் கொல்லப்பட் போது கூட யூதர்களின் குறுகிய மனப்பாண்மையின் காரணமாகத்தான் இயேசுவைப் பின்பற்றுவது என்பது மேற்கண்ட மூன்று படி நிலைகளிலும் அவரோடு நம்மை ஐக்கியப்படுத்திக் கொள்வதை நாம் அறிந்திருக்கின்றோமா, என்பதை சிந்தித்துப் பார்ப்போம். இயேசுவைப் போல் நாமும் நற்செய்தியை எவ்வித சூழ்நிலையிலும் பறை சாற்ற முன்வருவோம்.